★ விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 ஆடி 4 ஷவ்வா 9 இதழ் 159

யாழ்ப்பாணம் புதன்கிழமை 20—7—83

## முன்னாள் யாழ். அபி. சபைத் தலைவர் 'நடா' ஜனாதிபதியைச் சந்திப்பார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் பதவியிலிருந்து ராஜினாமா செய்துள்ள திரு. சு. நடராஜா இம்மாதம் 22ம் தேதி ஜனாதிபதி மாளிகையில், ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவை சந்திக்கவிருக்கிறார்.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அழைப்பை ஏற்றே திரு. நடராஜா அவரை சந்திக்கவிருக்கிறார்.

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை தலைவர், உறுப்பினர் பதவிகளிலிருந்து ராஜினாமா செய்வது தொடர்பான கடிதமொன்றை திரு. சு. நடராசா இம்மாதம் 13ம் தேதி ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்திருந்தார். அக்கடிதம் ஜனாதிபதிக்கு கிடைக்குமுன்னரே, தம்மை வந்து சந்திக்குமாறு, ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா, திரு. சு. நடராசாவுக்கு, இம்மாதம் 14ம்தேதி அழைப்பு ஒன்றை அனுப்பியிருந்தார். ஜனாதிபதியின் இந்த அழைப்பு யாழ். மாவட்ட சபை தலைவரின் காரியாலயத்திற்கு இம்மாதம் 18ம் தேதி வந்துசேர்ந்தது.

இம்மாதம் 15ம் தேதி நடந்த யாழ். மாவட்ட சபை கூட்டத்தில், திரு. சு. நடராசா, தமது ராஜினாமா பற்றி அறிவித்தார். பின்னர் உத்தியோகபூர்வமாக தமது ராஜினாமா கடிதத்தை யாழ். அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கவும், தமது உத்தியோகபூர்வமான காரை ஒப்படைக்கவும் இம்மாதம் 18ம் தேதி, திரு. சு. நடராசா, யாழ். மாவட்டசபைத் தலைவர் காரியாலயத்திற்குச்சென்றிருந்தார். அப்போது ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அனுப்பிய கடிதத்தை பார்வையிட நேரிட்டது.

(8-ம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதி கூட்டும் வட்டமேசை மகாநாடு:

# கூட்டணி இன்று காலை கொழும்பில் கூடி முடிவுசெய்யும்

## கம்யூ. கட்சி, ம.ஐ.மு. இன்னும்முடிவில்லை சுதந்திரக்கட்சி கலந்துகொள்ளாது

(யாழ்ப்பாணம்)

**பயங்கரவாத நடவடிக்கைகளை முற்றுக ஒழிப்பது உட்பட தமிழர்கள் பிரச்னைகள் பற்றி ஆராய்ந்துமுடிவு எடுக்க ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இன்று காலை கூட்டவுள்ள வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்வது பற்றி தமிழர் விடுதலை கூட்டணி பாராளுமன்றக் குழு இன்று காலை கொழும்பில் கூடி இறுதி முடிவு எடுக்கவுள்ளது.**

கோப்பாய் எம். பி. திரு. எம். ஆலாலசுந்தரத்தின் இல்லத்தில் நேற்று மாலை நடைபெற்ற கூட்டணி பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், உடுப்பிட்டி எம். பி. திரு. ரி. இராசலிங்கம், யாழ். எம். பி. திரு. வி. யோகேஸ்வரன், கோப்பாய் எம். பி. திரு. எம். ஆலாலசுந்தரம் ஆகியோர் கலந்துகொண்டார்கள். சில எம். பி.க்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டுதங்கள் கருத்தைத் தெரிவித்தார்கள் என அறிபப்படுகிறது.

ஜனாதிபதி கூட்டும் வட்டமேசை மாநாட்டிற்கு செல்வதில்லை என்று முன்னர் கூட்டணி எம். பி.க்கள் முடிவு செய்து அம்முடிவை கடித மூலம் ஜனாதிபதிக்கு அறிவித்திருந்தனர்.

கூட்டணியினருக்கு விருப்பமான சில அம்சங்களும், இம்மகாநாட்டில் சேர்த்துக்கொள்ளப்படும் என ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன கூட்டணி செயலாளர்நாயகம் திரு. ஏ. அமிர்தலிங்கத்திற்கு இரண்

(8-ம் பக்கம் பார்க்க)

## இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்க கோரிக்கை

(கரவெட்டி)

ஜனாதிபதி இன்று கூட்டும் வட்டமேசை மாநாட்டை ஆட்சேபித்து இன்று ஹர்த்

(8-ம் பக்கம் பார்க்க)

### விலை அதிகரிப்பு ஒத்திவைப்பு

இன்று தொடக்கம் 'ஈழநாடு' நாள்இதழின் விலை 25 சதத்தால் அதிகரிக்கப்படும் என்று நேற்றைய இதழில்அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனல் மறு அறிவித்தல் வரை இவ் விலை அதிகரிப்பு பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

— நிர்வாகி

மன்னாரில் நடக்கும்

## கூட்டணி மாநில மாநாட்டு நிகழ்ச்சிகள்

(மன்னார் நிருபர்

மன்னாரில் எதிர்வரும் 23ம், 24ம்-திகதிகளில் நடைபெறும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூன்றாவது மாநில மாநாட்டு நிகழ்ச்சி நிரல் வருமாறு:

23-ம் திகதி

காலை 9-00 மணி: மன்னார் எம். பி. பி. எஸ். சூசைதாசன் இல்லத்தில் மத்திய செயற்குழு கூட்டம்.

10-00 மணி: தலைவர் எம். சிவசிதம்பரம் நகரமண்டப வாயிலிலிருந்து மங்கல வாத்தியங்களுடன் நிகழ்ச்சி நடைபெறும் இடத்துக்கு அழைத்து வரப்படுவார்.

10-05 மணி உதயசூரியன் கொடியேற்றம், தமிழ்தேசிய கீதம்.

[8-ம் பக்கம் பார்க்க)

வவனியா பகுதியிலுள்ள

## சின்னத்தம்பனையிலும் துப்பாக்கி கொள்ளை

[வவனியா நிருபர் ரி. விவேகராசா]

வவனியாப் பகுதியிலுள்ள சின்னத்தம்பனை என்ற இடத்திலும் விவசாயி ஒருவரின் துப்பாக்கி நேற்று கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் வீரன் பெருமாள் என்ற 68 வயது விவசாயின் துப்பாக்கியே கொள்ளை யடிக்

(8-ம் பக்கம் பார்க்க)

## கூட்டணிமன்னார்மாநாட்டிற்கு ரூ. 50 000 செலவிடப்படும்!

(மன்னார்)

மன்னாரில் எதிர்வரும் 23ம் 24ம் திகதிகளில் நடைபெறவுள்ள தமிழர் விடுதலைக்கூட்டணியின் மூன்றாவது மாநிலமகாநாட்டிற்கென 50ஆயிரம் ரூபாவை செலவிடுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை வரை மன்னார் மாநில மகாநாட்டிற்கென 25 ஆயிரம் நிதி சேகரிக்கப்பட்டுள்ளது. மிகுதி 25 ஆயிரம் ரூபாவும் எதிர்வரும் 21ம் திகதிக்குமுன் சேகரிக்கப்படுமென மாநில மகாநாட்டு நிதிக்குழு தெரிவித்துள்ளது.

இதுவரை மாநில மகாநாட்

(8-ம் பக்கம் பார்க்க)

உ

கிறீன்லன்ஸ் கிறீம் கவுஸ்

நெல்லியடி

ஆரம்ப விழா அழைப்பு

அன்புடையீர்,

நெல்லியடி கிறீன்லன்ஸ் ஸ்தாபனத்தார் புதிதாக ஆரம்பித்திருக்கும் கிறீம் கவுஸ் ஆரம்ப விழா இன்று புதன்கிழமை (20-7-83) காலை 9-00 மணிக்கு நடைபெறவிருப்பதால் அத்தருணம் வருகை தந்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவைநாடும்
கிறீன்லன்ஸ் கூல்பார்
கிறீன்லன்ஸ் கிறீம் கவுஸ்
உரிமையாளர்

நெல்லியடி,
கரவெட்டி.
8053

இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு

## மீசாலையில் பலியான மற்றவர் மயிலிட்டியைச் சேர்ந்த அருள்நாதன்!

### இரு சடலங்களும் எரிக்கப்பட்டன!!

(யாழ்ப்பாணம்)

மீசாலையில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான மற்ற இளைஞர் மயிலிட்டியைச் சேர்ந்த இராமநாதன் அருள்நாதன் (19 வயது) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் பணிப்பைத் தொடர்ந்து இரு இளைஞர்களின் சடலங்களும், நேற்றுப் பிற்பகல் ஊர்காவற்றுறைப் பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டுஎரிக்கப்பட்டன.

யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் இருந்த இரு சடலங்களும் பாய்களால் சுற்றப்பட்டு ட்ரக்கில் இராணுவப்பாதுகாப்புடன்ஊர்காவற்றுறைநோக்கி

(8-ம் பக்கம் பார்க்க)

சிறியோர்கள் பெரியோர்கள் பெண்களுக்கு

பொழுதுபோக்கிற்கு

T. V. GAMES
ரி. வி. கேம்ஸ்

20 விளையாட்டுக்கள் - முற்றிலும் குளிரூட்டப்பட்ட ரி. வி. திடல்
1-00, -/50, -/25 சதம் மட்டுமே

நியுவிக்ரேஸ் எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்,
23, மணிக்கூட்டுக் கோபுர வீதி,
யாழ்ப்பாணம். [8003]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

திருநெல்வேலி விவசாயப் பாடசாலைக்கு அருகாமையில் இரண்டு காணிகள் விற்பனைக்குண்டு. பழைய வீட்டுடன் 1 பரப்பு 11 குளி காணி பிரதான வீதியிலுண்டு. 3 பரப்பு 12 குளி பங்குக் கிணற்றுடனுண்டு. தொடர்பு: 18, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.
8042

யாழ். பெரிகடை அருகில் கஸ்தூரியார் வீதியில் முதலாம் பஸ்தரிப்பில், ஓர் வியாபாரக் கட்டிடம் (Commercial Building) உடன் விற்பனைக்குண்டு. விபரம்:—19, கடைச் சாமி வீதி, நாவலர் வீதிக்கப்பால்: Phone: 22335
(8037)

Honda C 90 புதிய மொடல் 83 சிறி ரூபா 13,500/- ஸ்கந்தராசா, கனகரத்தினம்வீதி, வட்டுக்கோட்டை. 8036

ரொக்கமாக பணம் செலுத்தியோ, அன்றில் மாதாந்தம் தவணைமுறைக் கொள்வனவிலோ நீங்களும் ஓர் ஆங்கில தட்டச்சு இயந்திரத்தை பெறுங்கள். எம்மிடம் தரமான, புதிய, பழைய, ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் பல விலைகளிலும் உண்டு. புதிய, பழைய தமிழ் தட்டச்சு இயந்திரங்கள் உள்ளவர்கள் அவற்றை விற்கவிரும்பின் எம்முடன் தொடர்பு கொள்க: ''தமிழர் நிதியம்'' 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். போன்: 22437.
(8045)

## தேவை

எமது ஸ்தாபனத்திற்கு விற்பனையாளர்களாக பயிற்சி பெறுவதற்கு 18ல் இருந்து 25 வயதிற்கு உட்பட்ட இளைஞர்கள் உடன் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். A. சுப்பையா and கோ, 4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
8047

மூன்று ஆண்டுகளுக்கு குறையாத அனுபவமுள்ள லொறி சாரதி தேவை. தொழில் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட சம்பளம் வழங்கப்படும். வியாழக்கிழமை (21- 7- 83) நேரில் வரவும். A. Baur and Co Ltd, No 5, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 8029

வீட்டு வேலைக்கு உடன் (35-40வயதுக்கிடையில்)பெண் உதவியாள் தேவை. செ. சற்குணனந்தன், 27, அராலி வீதி, யாழ்ப்பாணம். 8013

## தவறிவிட்டது

எமது வானொலிப் பெட்டி குறுண்டிக் 1819620, K. K. S. வீதியிலுள்ள இணுவில் வியாபார நிலையத்தில் தவறி விட்டது. தெரிந்தவர்கள் உடன் அறிவிக்கவும் சன்மானம் கொடுக்கப்படும். சி. தேவநேசன், புகையிரத நிலையவீதி, கோண்டாவில். 8043

யாழ்ப்பாணத்துக்கும், குறிகாட்டுவானுக்கும் இடையில் டெலிக்கா வானின் வீல்கப் 17- 07- 83 தொலைந்து விட்டது. தயவுசெய்து கண்டெடுப்பவர்கள் பின்வரும் முகவரிக்கு தெரியப்படுத்தவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். கோ. மகேந்திரன், 6, காதிஅபூபக்கர்வீதி, யாழ்ப்பாணம். 8034

## கல்வி

ஒரு மாதத்தில் செய்முறையுடன் வெல்டிங், வயரிங், மோட்டார் மெக்கானிசம் கற்பிக்கப்படும். சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும். ஆரம்பம்: 22- 07- 83. The Jaffna Engineeirng Collage J.E.C. (யாழ். புகையிரதக் கடவைக் கருகில்), 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 8038

London Exams - May 1984 C. E. I. Part 1 May 1984 A/L இருபாடங்களுடன் தோற்றலாம். City and Guilds May 1984 O/L லுடன் தோற்றலாம். ஆரம்பம்: 23- 7- 83. The Jaffna Engineering College. J. E. C., 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (யாழ். புகையிரதக் கடவைக்கருகில்) 8039

## அறிவித்தல்

காரைநகர் ஸ்ரீசிதம்பரேஸ்வர சனசமூக நிலையத்தால் 16- 7- 83 ல் நடத்தவிருந்த அதிஸ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் 15- 1- 84 அன்று நடைபெறும் என்பதை தாழ்மையுடன் அறியத்தருகின்றோம். முடிவுகள் 18-1-84 திகதி ஈழநாடு பத்திரிகையில் வெளிவரும்.

இப்படிக்கு
நிலையத்தின்சார்பில்
**ஆ. சிவபாதம்**
7990

## வருடமொன்றுக்கு உங்கள் பணத்திற்கு

**26% தொடக்கம் 30% வரை**

வட்டி பெற்றுக்கொள்ளுங்கள்.

குறைந்த தொகை ரூபாய் 1000/-
எந்நேரமும் அறிவித்தலின் பின்
முழுப் பணத்தையும் திருப்பிப் பெறலாம்.

விபரங்களுக்கு:
JAFFNA PROPERTY TRADES LTD.
3, நவீன சந்தை, (மேல்மாடி), யாழ்ப்பாணம்.
போன்: 23698

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம்
மல்லாகம்

மரணசாதனமின்றிக் காலஞ்சென்ற இளவாலை செல்லப்பா குமாரசுவாமி பெண் இரத்தினம்மாவென மறுநாமங்கொண்ட அன்னம்மா விட்டுச்சென்ற சொத்துக்கள் சம்பந்தமாக.

-மரணமெய்தியவர்
வேலுப்பிள்ளை செல்லத்துரை, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக் கட்டுவன்,
-மனுதார்

மரண சாதன நியாயாதிக்சம் } 145/T

எதிராக

1. செல்லப்பா குமாரசுவாமி, பத்தாவத்தை, இளவாலை மேற்கு, இளவாலை.
2. வேலுப்பிள்ளை தம்பு. புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக் கட்டுவன். தற்சமயம் இல. 11, ஐம்பத்தைந்தாம் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு-6.

-பிரதிவாதிகள்

மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்துக்களையும், உடமைப் பொருட்களையும் நிர்வகிப்பதற்கு, மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் மனுதார் நிர்வாகப்பத்திரம் தனக்கு வழங்குமாறு இந்நீதிமன்றத்தில் இவ்வழக்கைத் தொடுத்தமையினால் இந்நீதிமன்றம் அவரின்கோரிக்கைக்கு இணங்கிப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இது சம்பந்தமாக அக்கறையுள்ள ஆள் எவரும் 1983ம் ஆண்டு மாசி மாதம் 2ந் திகதி முற்பகல் 9மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி இவ்வழக்கிற் பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளையை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குத் தக்க காரணமிருப்பின் அதனை இந் நீதிமன்றத்திற்குக் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1982ம் ஆண்டு மார்கழி மாதம் 16ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி.

**சு. வ. கணேசன்,**
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
மல்லாகம்.

தயாரித்தவர்:
**வ. முத்துக்குமாரசுவாமி,**
மனுதாரின் சட்டத்தரணி.

பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதன் திகதி 19-10-83 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**ஆ. சிவபாதசுந்தரம்,**
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
மல்லாகம்.
8026

## புதிய எம். பி

(கொழும்பு)

ஹிரியாலயத் தொகுதியின் புதிய எம். பி யாக டாக்டர் வை. எவ். பி. ஹேரத் ஐ. தே. க செயற்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் காலஞ்சென்ற உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு எஸ். பி, ஹேரத்தின் சகோதரராவர்.

(இ. வெ)

## முக்கிய அறிவித்தல்

எமது நிதிநிறுவனத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் / கணக்காளராகக் கடமையாற்றிய திரு. ஆர். ரி. குகனேசன் 12-6-83 தொடக்கம் எமது நிறுவனக் கடமைகளில் இருந்து விடுவிக்கப்பட்டுவிட்டதால் அவருடன் எமது நிறுவனம் சார்பாகச் செய்யப்படும் எவ்வித கொடுக்கல் வாங்கல்கட்கும் நிறுவனம் பொறுப்பாளியாகாது என்பதைப் பொதுமக்களுக்கும், எமது வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

**தமிழர் நிதியம் நிதிநிறுவனம்**
**140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

## சவூதியில் துறைமுகத் தொழிலாளர் நேர்முகப்பரீட்சை

மேற்படி நேர்முகப்பரீட்சை கொழும்பில் எதிர்வரும் சனிக்கிழமை (23-7-83) நடைபெறும்.
எம்முடன் பதிந்தவர்களும் புதிதாகப் பதிவு செய்ய விரும்புவோரும் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**சவூதியில் பண்ணைத் தொழிலாளர் தேவை**
WANTED FARM LABOURERS IN SOUDI

22 வயதிற்கு மேற்பட்டவர்கள் பாஸ்போட்டும் அதன் போட்டோஸ்ராற் இரண்டும், படங்கள் 14, பதிவுப் பணம் 50/- ஆகியவற்றுடன் 22-7-83ற்கு முன் தொடர்பு கொள்ளவும்.

**சு. ஸ்ரீபாஸ்கரன்,**
தலைவர்,
மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம்.
Labour Licence No. 292 (8025)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோவில் தொண்டர் சபையினரால் 17-7-83 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட சீட்டுகளின் முடிவுகள்:-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | 6575 | (2) | 3170 | (3) | 5302 |
| (4) | 640 | (5) | 5597 | (6) | 4792 |
| (7) | 4076 | (8) | 2384 | (9) | 1937 |
| (10) | 7398 | (11) | 4663 | (12) | 5109 |
| (13) | 4727 | (14) | 1775 | (15) | 7137 |

இங்ஙனம்
**அம்பாள் தொண்டர் சபையினர்,**
19 - 7 - 83,
8027

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

இ. இராமநாதன்
(உதவி முகாமையாளர், இலங்கைவங்கி, பருத்தித்துறை)

தோற்றம்: 28-9-1935 மறைவு: 22-6-1983



அன்னாரின் ஈமக்கிரியையில் நேரில் கலந்து கொண்டவர்கட்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக எதிர்வரும்
**22 - 7 - 83**
காலை 7 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும்

அந்தியேட்டிக் கிரியையில் கலந்துகொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**மனைவியும், சகோதரரும், பிள்ளைகளும்.**
கரணவாய் வடக்கு, கரவெட்டி. (8041)

**மட்ரூஸ் - ரூபவாகினி** தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தெளிவாக கண்டுகளிக்க வெளிநாட்டில் பயின்ற தொழில்நுட்ப வல்லுநர்களால் ஒருவருட உத்தரவயதத்துடன் ஏரில் அமைத்துக்கொள்ள

**வீனஸ்** 266/1, ஸ்ரான்லி வீதி, (ஸ்ரீதர் தியேட்டர் அருகில்) யாழ்ப்பாணம்.

**நியூவீனஸ்** 79/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(10 மைல் தூரத்திற்குள் வாகனக்கூலி இலவசம்)

# எண்ணெய்விலையில்மாற்றமில்லை
# "ஒபேக்" நாடுகள் தீர்மானம்!

லண்டன், ஜூலை, 19

எண்ணெய் உற்பத்தி நாடுகள் தாபனம் (ஒபெக்) ஒரு பீப்பாய் எண்ணெய்க்கான விலையை லண்டனில் தீர்மானிக்கப்பட்ட விலையிலேயே வைத்திருக்க இணங்கியுள்ளது.

நேற்று முன்தினம் ஹெல்சிங்கியில் முடிவடைந்த ஒபெக் நாடுகளின் கூட்டமுடிவில்இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

கூட்ட முடிவில் சவூதி அரேபிய எண்ணெய்த்துறை அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில், எண்ணெய்க்கான விலையை உயர்த்தும் எண்ணம் இப்போதைக்கு இல்லையென்றும், அதனால் 4 மாதங்களுக்கு முன்னர் லண்டன் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட ஒரு பீப்பாய் எண்ணெய் 29 அமெரிக்க டொலருக்கே தொடர்ந்து இருக்குமென்றும் குறிப்பிட்டார்.

இத்தாபனத்தின் அடுத்த கூட்டம் எதிர்வரும் டிசம்பர் மாதம் ஜெனீவாவில் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டது. (சூ)

## சேதத்திற்குள்ளான உபதபாலகம் இயங்காததால் மக்கள் கஷ்டம்

(சுழிபுரம்)

இனந்தெரியாத இளைஞர் கோஷ்டியின் தாக்குதலுக்குள்ளாகிய பண்ணாகம் உபதபால் நிலையம் இயங்காதிருப்பதால் இப்பகுதி மக்கள் பெரும் கஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர். தபால் நிலையத் தொலைபேசி மற்றும் சேதம் செய்யப்பட்ட உபகரணங்கள் இதுவரைதிருத்தம் செய்யப்படவில்லை. தபால் அலுவலகப் பாவிப்பிலுள்ள தபால் பெட்டியில் போடும் கடிதங்கள் எவ்வாறு எடுக்கப்படுகின்றன என்பது தெரியவில்லை.

தினமும் பல்நூற்றுக்கணக்கான மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் ஒரு மத்திய முக்கிய உபதபால் நிலையமாக இந் நிலையம்விளங்கியது குறிப்பிடத்தக்கதாகும். (அ)

# மேற்கிந்திய தீவுகள் அணிக்கு லோயிட் தொடர்ந்து காப்டன்

லண்டன், ஜூன், 19

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் கப்டன் பதவியிலிருந்து விலகிச் செல்வதென்ற தமது யோசனையை கப்டன் 'கிளைவ் லோயிட்' மாற்றியுள்ளார்.

இதனால் இவ்வருட இறுதியில் இந்தியா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்குச் சுற்றுலாவை மேற்கொள்ளும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு இவரே தலைமை தாங்குவார்.

உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் இந்தியாவிடம் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து 'கிளைவ் லோயிட்' தமது தலைமைப் பதவியிலிருந்து விலக இருப்பதாக அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (சூ)

## பல்கலைக்கழகங்களின் பிரசுரங்கள், வெளியீடுகளை பரிசீலிக்க விசேட அதிகாரி!

(கொழும்பு)

நாட்டிலுள்ள சகல பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள், உயர்கல்வி நிலையங்களின் வெளியீடுகள், பிரசுரங்களைப் பரிசீலிப்பதற்கென விசேட தகுதி வாய்ந்த அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ராஜாங்க அமைச்சின் செயலாளரான திரு. டக்ளஸ் லியனகேயே இந்த அதிகாரியாவார். இவர் பல்கலைக்கழகங்கள், தொழில் நுட்பக்கல்லூரிகள் வெளியிடும் பிரசுரங்கள், மற்றும் ஏனைய வெளியீடுகளைப் பரிசீலனை செய்வதோடு இவை சம்பந்தமாகத் தகவல் திணைக்களத்தின் இணைப்பதிகாரியாகவும் விளங்குவார்,

அண்மைக் காலங்களில் பல்கலைக்கழக வட்டாரங்களில் எழுந்துள்ள நெருக்கடிநிலையை அடுத்தே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது, (கி)

## "சனசமூக நிலையங்கள் உண்மைத் தொண்டர்களை உருவாக்க வேண்டும்"

(புலோலி, கரவெட்டி)

''கிராமிய மட்டத்தில் சமூகப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது மிக அவசியமாகும். இதற்குச்சனசமூக நிலையங்கள் சிறந்த சாதனங்களாக விளங்குகின்றன. சனசமூக நிலையங்கள் கிராமம் தோறும் தியானமண்டபங்களை அமைத்துகூட்டுவழிபாடு நடைபெறவழிவகுப்பதுடன் ஆலயங்களில் பஜனைகள் கூட்டுப் பிரார்த்தனைகள் ஆகியனவற்றும் நடாத்தவேண்டும்.''

இவ்வாறு வடமராட்சி தெற்குமேற்கு உதவிஅரசாங்க அதிபர் பிரிவு சனசமூக நிலையங்களின் சமாஜத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில்பிரதம விருந்தினராகக்கலந்து கொண்ட யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியப் பொதுச்செயலாளர் திரு. எஸ். வரதராசா குறிப்பிட்டார். நெல்லியடி மத்தியமகா வித்தியாலய மண்டபத்தில் சமாஜத்தலைவர் திரு. ம. கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''சமுதாயத்திற்கும் கிராம முன்னேற்றத்திற்கும் வேண்டிய சகல பணிகளையும் செய்து கொடுப்பதில் சனசமூக நிலையங்கள் முன்நிற்க வேண்டும். சனசமூக நிலையங்கள் பத்திரிகைகளை வாசிப்பதற்கு வழங்குவனவாகமட்டும் இருக்கக்கூடாது.

சனசமூக நிலையங்கள் சிறந்த முறையில் செயற்பட்டு மக்கள் நன்மை அடைய வழிவகுக்க வேண்டும். சேவை மனப்பான்மையும், துடிப்பும் மிக்க இளைஞர்களும் செயற்குழுக்களில் இடம்பெறுவதின் மூலமே சனசமூக நிலையங்களைத் திறம்பட நிர்வகிக்கலாம்.

(7-ம்பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் ஆயிரம் காமராஜர் சிலைகள்

சென்னை, ஜூலை, 19

தமிழ்நாடு முழுவதும் ஆயிரம் காமராஜர் சிலைகளை அமைக்க சிவாஜி ரசிகர் மன்றம் முடிவுசெய்திருப்பதாக சிவாஜி கணேசன் நேற்று முன்தினம் சென்னையில் தெரிவித்தார்.

பெருந் தலைவர் காமராஜரின் 83-வது பிறந்த தின விழா நிகழ்ச்சியொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (சூ)

# பிரிட்டனில் இனத்துவேஷம் பெருமளவில் அதிகரிப்பு!
## இனசமத்துவக்கமிஷன் அறிக்கை

லண்டன், ஜூலை, 16

பிரிட்டனில் இனங்களுக்கு இடையே இனத்துவேசம் வளர்ந்துவருவதைப் பிரிட்டன் இன சமத்துவக் கமிஷன் சுட்டிக்காட்டியுள்ளது.

இக்கமிஷன் 1976ம் ஆண்டு இன உறவுகள் சட்டத்தின் பிரகாரம் நியமிக்கப்பட்டதாகும். இக்கமிஷன் அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் இன வேறுபாடு சம்பந்தமாகப் பிரிட்டனில் அண்மைக் காலம்வரை ஏற்பட்டுவரும் மாற்றங்களைச் சுட்டிக்காட்டி அதனைக் கண்டித்துள்ளது.

பிரிட்டனில் இப்போது என்றும் இல்லாதவகையில் இனத்துவேஷம் வளர்ந்து வருகிறது. குறிப்பாக வெள்ளையர் - கறுப்பர் என்ற வேறுபாடே இப்போது பெருமளவு தலைதூக்கியுள்ளது. இத்தகைய நிலைகளைக் கட்டுப்படுத்த முன்வர வேண்டுமென்றும் அக்கமிஷன் தனது அறிக்கையில் கேட்டுள்ளது. (சூ)

## தமிழகத்துக்கு கூடுதல் உணவு பெற மத்திய அரசிடம் கோரிக்கை

சென்னை, ஜூலை, 19

மத்திய உணவுத் தொகுப்பிலிருந்து தமிழ் நாட்டுக்குக் கூடுதலான உணவு வகைகளைப் பெற்றுக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்த தமிழ்நாடு நிதிமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் புதுடில்லி சென்றுள்ளார்.

இதுகுறித்து தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் தமிழ்நாட்டில் வறட்சி நிலவுவதினால் மத்திய அரசு கூடுதலான உணவு வகைகளைத் தமிழ்நாட்டுக்குத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

தமது அமைச்சரவை மீண்டும் இம்மாத முடிவுக்குள் விஸ்தரிக்கப்படும், சர்ச்சைக்குரிய பத்திரிகைகள் சட்டத்தைக் கைவிடுவது என்றும் அவர்தெரிவித்தார்.

அ.தி.மு.க. - இந்திரா காங்கிரஸ் கூட்டு ஏற்படுவது தொடர்பாக முதலமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில் அதற்கான நடவடிக்கை எதுவுமே இடம்பெறவில்லையென்றும் தெரிவித்தார். (சூ)

## வட்ட மேசை மகாநாடு
# எதிர்க்கட்சியினருக்கு பூரண கருத்துச் சுதந்திரம்
## — ஜனாதிபதி ஜே. ஆர்.

(கொழும்பு)

''வட்டமேசை மகாநாட்டில் எதிர்க்கட்சிகளுக்கு அவற்றின் ஆலோசனைகளையும், கருத்துக்களையும் வெளியிட பூரண சுதந்திரம் இருக்கின்றது'' என்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகரான திரு கே. பி. சில்வாவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கம்யூனிஸ்ட் பிரமுகர் சில்வா தமது கட்சி இம்மகாநாட்டில் பங்குபற்றப்போவதில்லையென்றும், ஏனெனில் இம்மகாநாடு சிறுபான்மையினர் பிரச்னைகளுக்கு நீண்ட காலத் தீர்வைத் தரப்போவதில்லையென்றும் ஜனாதிபதிக்கு அறிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும்வகையில் ஜனாதிபதி அவருக்கு எழுதிய கடிதத்திலேயே மேற்கண்டவாறுதெரிவித்துள்ளார். (கி)

## யாழ்.ப.நோ. கூ. சங்க பிரச்னை "பாவனையாளர்களைக் கைவிடலாகாது!"

(யாழ்ப்பாணம்)

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் உணவுப் பொருள் விநியோகம் பற்றி ஆராய்வதற் கொன அண்மையில் சங்கத்தலைவர் பி. வி. நவரத்தினம்தலைமையில்கூடியபொழுது பின் வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஒரு சிறு குழுவினர் விட்ட குறைகளுக்காக இப்பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களையும் அதன் ஆதரவாளர்களையும் தண்டிக்கலாகாது. பாவனையாளர் நிலையங்களை அரைகுறையாக நடத்துவதற்காக, அவற்றைமுற்றாகமூடிவிட வேண்டும் என்றும் அண்மையில் தீர்மானித்திருப்பது கூட்டுறவாளர்களுக்கு செய்யத்தகாத பெரும்நஷ்டமாகும். ஆரம்பகால சங்கங்களையும் அவற்றிற்கூடாக நன்மைகளைப் பெற்றுவந்த ஆயிரக்கணக்கான பாவனையாளர்களையும் கைவிடலாகாது.

கூட்டுறவு சேவையைதொடர்ந்து செய்ய தகுதியற்றவர்கள் என்று இன்றையநிர்வாகிகள் கருதினால் அவர்கள் வேறு பொறுப்புள்ள கூட்டுறவாளர் குழுவினரை இதேகடமைகளை தொடர்ந்துசெய்யவழிவிடுவது மேலானதாகும். மாற்றுக்குழு ஒன்று பொறுப்பேற்க தயங்குமானால் அரசாங்க அதிபர் முன்வந்து ஒரு சுதந்திரமான குழு ஒன்றை பதவியில் நியமனம் செய்யவேண்டும்.

இது விடயமாக அரசாங்க அதிபரைச்சந்திப்பதற்கு 13 பேர் கொண்ட ஒரு குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. (து)

## "இந்திய வங்கிகள் தேசியமயம்: கிராமிய வளர்ச்சிக்கு உதவியுள்ளது"

புதுடில்லி, ஜூலை, 19

இந்தியாவில் வங்கிகள் தேசியமயமாக்கப்பட்ட பின்னர் கிராமப்புறம் கூடுதலான அளவு வங்கி வசதிகளைப் பெற்றிருக்கிறது. சென்ற ஆண்டில் மாத்திரம் 16 சத வீதத்தினால் வைப்புகள் தொகை அதிகரித்துள்ளன.

இந்தியாவில் வணிக வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டதன் 14வது ஆண்டு நிறைவையொட்டி இந்திய ஒதுக்கு வங்கி வெளியிட்ட அறிக்கையில் இவை தெரியவந்துள்ளன.

இந்தியாவில் இப்போது 41,000 கிளைகள் இவ்வங்கிகளுக்கு இருக்கின்றன. இவற்றோடு பிராந்திய நிலையங்களையும் சேர்த்தால் மொத்தம் 60,000 வரையில் கிளைகள் விரிவடைந்துள்ளன.

1969ம் ஆண்டு வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டதன் பின்னர் பெருமளவு கிளை விரிவாக்கம் கிராமப்புறங்களிலே ஏற்பட்டுள்ளது. அத்துடன் வைப்பாக்கம், கடனாக்கம் என்பனவும் இப்பகுதிகளில் பெருமளவு விரிவடைந்துள்ளன. முன்னுரிமைத் துறைகள் பெருமளவு கடன் வசதி பெற்றுள்ளன. வங்கிகளின் தேசியமயம் கிராமிய பொருளாதார வளர்ச்சிக்குப் பெருமளவு உதவியுள்ளது.

வரும் ஆண்டுகளில் பின்தங்கிய பகுதிகளுக்கு மேலும் வங்கி வசதிகள் செய்துகொடுக்க ஒதுக்கு வங்கி நடிவடிக்கை எடுக்குமென்றும் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (சூ)

## தேர்த் திருவிழா

[இருப்பிட்டி]

புங்குடுதீவு மேற்கு பிட்டியம்பதி ஸ்ரீகாளிகாபரமேஸ்வரிஅம்மாள் ஆலய தேர்த்திருவிழா எதிர்வரும் வியாழக் கிழமை நடைபெறவுள்ளது. (கி)

மணிவாக்கு

ஒவ்வொரு கழுதையும் தனது குரலைக் கேட்பதையே விரும்புகிறது.

- பிரெஞ்சுப் பழமொழி

# நமது நோக்கு

## தவிர்க்கக்கூடிய துன்பம்

மகாத்மாகாந்தி சுதந்திரம் பெற்றுக்கொடுத்த இந்தியாவில் வரதட்சிணை வாங்குகிற பழக்கம் படித்த மக்களிடையே இன்று ஏற்படுத்திவரும் பயங்கரநிகழ்ச்சிகளை என்னென்று நம்புவது?

மகாத்மா வாழ்ந்த காலத்தில் இக்கொடிய பழக்கம் இல்லாமலிருக்கவில்லை. அன்றும் இது பாமரமக்களை பெரிதும் பாதிக்கவில்லை. போதுமான அளவுகல்வி அறிவு படைத்தவர்களே பெண்களின் பெற்றோர்களிடமிருந்து பெருந்தொகைகளை கசக்கிப்பிழிந்தார்களென்று சிறப்பாகச் சிந்து மகாணத்தை காந்திமகான் குறிப்பிட்டிருந்தார்.

இன்றைய நிலையில் இந்திராவின் ஆட்சியில் சில இடங்களில் நிலைமை மோசமடைந்திருப்பதை இந்தியப்பிரதமரே சுட்டிக்காட்டியிருக்கிறார்; இளைஞரைச் சிந்திக்கும்படி தூண்டியிருக்கிறார்.

மணமென்பது பணத்திற்காகப்பெற்றோர் தங்களுக்கிடையில் செய்து கொள்ளுகிற ஓர் ஏற்பாடு என்பது இந்தியாவிலும் இங்கும் இன்றும் நிலவுகிறது. இந்தப் பழக்கம் சாதிப்பிரிவினையோடு நெருங்கிய தொடர்புடையதாய் இருக்கிறது. குறிப்பிட்ட ஒரு சாதியிலுள்ள - அதற்குள் உபபிரிவுகள் அநேகம் - இளைஞர்களுக்குள்ளும், இளம் பெண்களுக்குள்ளும் மணமகனையோ அல்லது மணமகளையோ 'சுண்டி' எடுக்கும் வழக்கம் இருக்கும் வரை என்னதான் சொன்னாலும் இது இருந்தே தீரும்.

இதனை அடியோடு ஒழித்துவிடவேண்டுமென்றால் பெண்களோ, இளைஞர்களோ சாதி என்கிற பிணிப்பைத் தகர்த்தெறியுமளவிற்குப் பெற்றோரை நிர்ப்பந்திக்கவேண்டும். எனவே இது தவிர்க்க முடியாத துன்பமல்ல.

இவ்வாறு கூறுவதால் சமூக முரண்பாடுகளையும் பிணக்கையும் நாம் சிந்தனையற்ற முறையில் உருவாக்கிவிட எத்தனிக்கவில்லை.

சாதிப்பித்து சரியாகப் புரிய முடியுமானால் சமூகத்தின் சீர்கேடென்பது இன்று நன்கு விளங்கக்கூடியதாக இருக்கிறது.

மணமகனும் மணமகளும் ஒப்புற்ற கல்வி குணம் நடைபோன்ற இன்றியமையாத பண்புகளில் பொருத்தமுடையவர்களாவது அவசியம். குடும்பங்களிடையே நிலவக்கூடிய ஒற்றுமை தானும் தேவையெனலாம். அவற்றை விட்டு மரபு கோத்திரம் செல்வம் செல்வாக்குப் போன்ற மயக்கமான விபரங்களில் மனத்தை தவிடலாகாது.

எங்கள் சமூகத்தில் சிறப்பாகயாழ்ப்பாணத்தில் எதிர்பாராத திருப்பங்களை இன்று சீதனக்கேடு உண்டாக்கிவருகின்றது; எனவே இந்தியக் கொடுமைகள் இங்கும்மறைமுகமாகப் புற்றெடுக்கின்றன; ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அவலக்கடலில் தத்தளிக்கின்றன!

மணம் என்பது மணமக்களின் எதிர்கால நன்மையைப் பெரிதும் பாதிக்கிற காரியம்; அவ்வளவு முக்கியமான ஒரு விடயத்தில்இன்று சோதிடரும் கல்யாணத் தரகரும் இட்டது சட்டமாகின்றது.

சீதனம், லட்சக்கணக்கில் வரன் பெற்றோருக்குச் சன்மானம் போன்ற கொடைகள் சாதாரணமாய் விட்டன. மாப்பிள்ளை மேல்மட்ட உத்தியோகம் என்பதே மிக முக்கியம்; வெளியூர் மாப்பிள்ளை தொழில் பார்க்கும் பெண்ணையே விரும்புகிறார். கல்யாணம் முடிப்பதற்கு திட்டமிட்டு நாடு திரும்புபவர் குறித்த கால எல்லைக்குள் பெண்ணுடன் திரும்பும் தீர்மானத்துக்கமைய அவள் பெயரிலும் (X) ஒரு பிரயாணச் சீட்டை எடுத்து வருவது சாதாரணமாய் விட்டது.

பயணச்சீட்டே கல்யாண ஒழுங்கில் பெரும் இடம் வகிக்கின்றது; ஏதேனொரு பெண்-குலம், நிறம் குணம் பணம், உத்தியோகத் திறமை, இவற்றையெல்லாம் கொண்டு ஒழுங்குகள் குறித்த தேதிக்குமுன் முடிவடையும்: சீதனத்தில் பெற்றோர் 'சந்தோஷத்தில்' பிணக்குகள் ஏற்படலாம்; இவையெல்லம் அந்தப் பெண்ணின் (X) பிரயாணச் சீட்டு சுமுகமாய்த் தீர்த்து வைக்கும்.

இவ்வித புதுமுறைத் திருமண நிச்சயம் வெளிநாட்டு உத்தியோகங்கள் ஏற்படுத்திய மாற்றம்; இதில் மோசமான அம்சம்: படித்துப் பெரும் உத்தியோகம் பார்க்கவல்ல பெண்களுக்கே கூடிய சீதனம் தேவைப்படுகின்றது!

சமூகக் கேடுகளையும், இவைபோன்ற கொடுமைகளையும் எதிர்த்துப்போராடும் வல்லமையை இன்றைய கல்விமுறை அளிக்கத்தவறிவிட்டது.

இளைஞர் உலகம், மாணவ உலகம் இந்தச் சீர்கெட்ட வழக்கத்தை ஒழிக்க புரட்சிமுறையில் சிந்திக்க தொடங்கவேண்டும்.

## சோதனைக்காலம்

பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் இப்போது சோதனைக்காலமென்பதை குறிப்பிடுவதல்ல இந்தத் தலையங்கம்.

நாட்டுக்கும் நாட்டுமக்களுக்கும் இது ஒரு பெரும் சோதனைக்காலம்; பொருளாதாரத்தில் மட்டும் எமது நாடு ஒரு வறியநாடு என்பதல்ல; அரசியலிலும் அறிவியலிலும் நாம் வறுமைப்பட்டிருக்கிறோமென்பதை உணர்ந்து நாடு மேடேறுது தடுப்பது ஒவ்வொருபிரஜையின் கடமையாகும்.

சண்டித்தனமும் சந்தர்ப்பவாதமும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன; சட்டத்தால் வெல்ல முடிந்த காரியங்களைக் கொண்டு பலம்தேடி, சண்டித்தனத்தால் சட்டத்தையும் நடுங்க வைக்கும் சூழ்நிலை பரவலாகிவருகின்றது.

தனிப்பட்ட வி. ஐ. பீஸ் (VIP'S) மட்டுமல்ல அரசியல் கட்சிகள், அதிகார வர்க்கத்தினர் முதலாளித்துவ மிடுக்குடையோர் பலம் குறைந்தவர்களை - சாதாரண பிரஜைகளை தங்கள் பகடைக்காயென மதிக்கின்றனர்.

என்ன மதியீனம்! சந்தர்ப்பவாதமும் சண்டித்தனமும் எங்கும் நெடுங்காலம் நிலைப்பதில்லை; மலிந்த நிலையில் சந்தைக்கு வரும் பொருட்களே!

அப்போது வியாபாரிகளுக்கும் தரகர்களுக்கும் அதிக கிராக்கி இராது.

எனவே இச் சோதனைக் காலத்தில் பொது மக்களைச் சுரண்டும் வர்த்தக வர்க்கத்தினர்; அப்பாவி மக்களைத் திசைதிருப்ப எத்தனிக்கும் அரசியல்வாதி(பேதை) கள்; சமூகத்தைக் கூறுபோட்டு தாம்உயரலாமென்று கணக்கிடும் அறிவிலிகள், இந்தக் கலங்கலான இடைவேளையில் வஞ்சனைச் செயல்களில் ஈடுபடுவது தங்களுக்கோ மக்களுக்கே நல்லதல்ல.

கூத்தாடிகளுக்கு இடம் கொடுக்காதீர்!

# ஜனாதிபதி கூட்டும் வட்ட மேசை: இன்று ஜி.ஜி. இருந்திருந்தால்

மேசைகள் யாவும் நாற்கோணமாகவே அமையும். தொல்பொருட்காட்சிச் சாலைகளில் மட்டும் ஒரு தண்டில் நிறுவப்பெற்ற மிகச் சிறுவட்ட மேசைகளைக் காணக்கூடும். இந்த நிலையில் அரசியல் விவகாரங்களைப் பேசும்பொழுது ஏன் வட்டமேசை மகாநாடு?

அதுதான் ஆங்கில நாட்டுப் பாரம்பரியத்தின் மகிமை. ஆ(ர்)தர் என்று ஒரு அரசன் மக்களின் அபிமானத்தைப் பெற்றிருந்தான். கிழக்குத் தேசங்களில் இராமாயணக் கதை பலமொழிகளிலும், பல நாடுகளிலும் பரவியதுபோல் ஆ(ர்)தர் மன்னனின் சரித்திரம் பலமொழிகளிலும் காவியமாகப் பரவியிருக்கிறது. அந்த மன்னன் ஆண்ட நாட்டு மக்கள் காட்டுமிராண்டிகளால் துன்புறுத்தப்பட்டனர். எனவே அவ்வாறு கஷ்டத்திற்குள்ளானவர்க்கு அபயம்வழங்கும் கடமையைச் செய்வதே அரசனின், அமைச்சர்களின் கடமையாயிற்று. அக்காரணத்தால் அம்மன்னனின் அமைச்சர்கள் மிகத்துணிவுடைய போர் வீரர்கள். அம்மன்னனின் கொலுமண்டபத்தில் இந்த அமைச்சர்கள் வட்ட மேசை அமைப்பில் அமர்வர். அதன் அர்த்தம் ஒருவர் மற்றவரில் கூடிய அந்தஸ்து உடையவரல்ல என்பதே. அனைவரும் சமம். விடயம் பேசுவதில் எவரும் விடயத்தை ஆரம்பிக்கலாம். அந்த மன்னனின் பாரம்பரியத்தில்தான் இன்றும் பிரிட்டிஷ் அரசு 'சேர்' பட்டம் வழங்குகிறது.

**சோமசுந்தரம் வன்னியசிங்கம்**

### இலங்கையில் வட்டமேசை

இலங்கையில் வட்டமேசை மகாநாடு நடத்த வேண்டும் என்று முதலில் குரல் எழுப்பியவர் காலம்சென்ற தலைவர் ஜி. ஜி. அவர் ஏறக்குறைய 25 வருடங்கட்கு முன்னரே வட்டமேசை மகாநாடு என்று கோரிக்கை விட்டிருந்தார். அந்நாளில் மற்றக் கட்சிகள் அதற்குச் செவிசாய்க்கவில்லை. ஆனால் இறுதியில் திரு ஜயவர்த்தனவின் யூ. என். பி. கட்சியே வட்டமேசை மகாநாட்டைக் கூட்டுவதைக் கொள்கைத் திட்டத்தில் சேர்த்துக் கொண்டது. ஆனால் வட்ட மேசை மகாநாட்டை விடயம் அனைத்தும் முடிந்த பின்னர் தான் கூட்டுகிறார்கள். வையாமல் விடுவதைப் பார்க்கிலும் காலம் தாழ்த்தி வைத்தல் நன்று என்ற அடிப்படையில் (Better Late Than Never) ஜி. ஜி. இன்று இருந்தால் நிச்சயமாகப் பங்கெடுத்திருப்பார்.

ஆங்கிலத்தில் Turn The Tables என்று ஒரு பதப் பிரயோகம் இருக்கிறது. அது ஒரு சொல் அலங்காரம். அதாவது மேசையை எதிர்த் திசையில் திருப்பிவிடுதல் என மொழி பெயர்க்கப்படும் அதன் அர்த்தம் நிலைமையை எதிராளிகள் எண்ணிய திசைக்கு எதிர்த்திசையில் திருப்புதல் எனப்படும். இன்று ஜி. ஜி. இருந்தால் இந்தவட்ட மேசை மகாநாட்டில் பங்கெடுத்து மேசைகளை மகாநாடு கூட்டியவர்களுக்கு எதிராகத் திருப்பியிருப்பார். ஜி. ஜி. இன்று இருந்தால் இந்தவட்ட மேசை மகாநாட்டில் எவ்வாறு உரையாற்றியிருப்பார் என்று சற்றுக்கற்பனை செய்து பார்ப்போம்.

### 'அமிர்' வழக்கில் ஜி. ஜி.

திரு. அமிர்தலிங்கத்தின் வழக்கில் என்ன செய்தாரென்பதை வழிகாட்டியாக வைத்துக்கற்பனை செய்வோம். அமிர்தலிங்கத்தில் சுமத்தப்பெற்ற குற்றச்சாட்டை முதலில் வாசித்தார். பின்னர் எந்தக் கட்டளையின் படி அது குற்றம் என்று கூறப்பெற்றிருந்ததோ அந்தப் பிரகடனத்தை வாசித்தார். அந்தப் பிரகடனம் எந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பெற்றதென்று அந்த 1947ம் ஆண்டுச் சட்டத்தையும் அதன் திருத்தத்தையும் வாசித்தார். உடனே அந்தப் பிரகடனம் அந்தச்சட்டத்தின் அதிகாரத்தைப் பெறவில்லையென்பது வெளியாயிற்று. பிரதமரின் ஆலோசனையுடனும் அந்த ஆலோசனைப்படியுமே ஜனாதிபதி பிரகடனம் செய்தல்வேண்டும் என்று சட்டம் கூறுகிறது. ஆனால் அந்தப் பிரகடனத்தில் பிரதமரின் ஆலோசனையைப் பற்றி ஒன்றுமே கூறவில்லை. பிரகடனம் செல்லுபடியாகாது; குற்றச்சாட்டுச் சட்ட வலுவற்றது என்று அரசதரப்புச்சட்டத்தரணிகட்கு எதிராக மேசைகளைத் திருப்பிவிட்டார். அப்பொழுது அரசதரப்புச் சட்டத்தரணிகளிடையே ஏற்பட்ட பரபரப்பையும் திகிலையும் நேரில் பார்த்தவர்கள் தான் அறிவர்.

இன்று இந்த மகாநாட்டில் ஜி. ஜி. என்ன சொல்லியிருப்பார். அரசமைப்புக்சட்டத்தை எடுத்து அதன் மூல வசனத்தை வாசிப்பார். அதில் மக்கள் 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 23ம் திகதி கொடுத்த பணிப்பின்படியே ஸ்ரீ லங்காக் குடியரசு உருவாக்கப்பெற்று என்றும் அரசமைப்புச் சட்டம் தயாரிக்கப்படுகிறது என்றும் பொறிக்கப் பெற்றிருப்பதைச் சுட்டிக் காட்டுவார். அடுத்தபடியாக இறைமை மக்களுடைய பராதீனப்படுத்த முடியாத உரிமை என்றிருக்கிறது. அடுத்தபடியாக அரசமைப்புச் சட்டத்தில் 24 நிர்வாக மாவட்டங்கள் ஒருங்கிணைந்தே ஸ்ரீ லங்கா குடியரசு உருவெடுக்கிறது என்று பொன் எழுத்துக்களால் எழுதப்பெற்றிருக்கிறது. அடுத்தபடி 1977-ம் ஆண்டு ஜூலை 23-ல் வடக்கு கிழக்கு மாவட்ட மக்கள் என்ன பணிப்பு விட்டிருக்கிறார்கள் என்று ஆராய்வார். அவர்கள் ஸ்ரீ லங்காக் குடியரசு என்ற ஒன்றை உரு

[5-ம் பக்கம் பார்க்க]

இன்று த. வி. கூ. தலைவர் 'சிவா'பிறந்த நாள்

# ஒற்றுமையின் சின்னம் அவர்

ஈழத்தின் அரசியல் வரலாற்றில் இன்றைய தினம் தென்னிலங்கையில் எடுக்கப்படும் முடிவுகள் நம்மினத்தை எவ்வாறு பாதிக்குமோ எனும் ஏக்கம் ஒரு புறம்; மறு புறத்தே தமிழ் ஈழத்தின் அரசியல் வரலாற்றில் தனியிடம் வகிக்கும் மக்கள் தலைவன் பிறந்த தினமின்று. எனினும் என் செய்வது? மகிழ முடியுமா? சொல்லொணு இடர்ப்பட்டு - இம்சைகட்குள்ளாகி இன்னல்கட்கு மத்தியில் சிங்கார வாழ்வைப் புறக்கணித்துவிட்டு-இளம் சிங்கங்கள் சிரித்த முகத்துடன் இருட்டுச் சிறைகளில் நாட்களை எண்ணிக்கொண்டிருக்கின்றனர். ஏதுமறியாத ஏழைத் தமிழ் மண்ணின் மைந்தர்கள் தினமும் உயிர்களைத் தெருவோரத்தே இழந்துபடுகின்றனர். இக்கட்டான இவ்வேளையில் தலைவனின் பிறந்த நாள் குறித்து மகிழ முடியா நிலை!

பத்தாண்டுகட்கு மேலாகத் தமிழினம் போர்க் கோலம் பூண்ட நாள் தொட்டு இன்று வரை கொடிய சட்டங்களின் கீழ் சாவின் மடியைத் திரத்துடன் முத்தமிடத் துடிக்கும் வேழம் நிகர்த்த வேங்கைகட்காக நீதியின் சந்நிதானத்தில் நெறியோடு வாதாடி - வழக்காடி - வெற்றிகாணும் நம்மிளைஞரின் காவலன் அவர். ஆண்மை மிகு அவர் குரல் கேட்டு சின்னஞ் சிறு மழலையும் சீறுகொண்டெழுந்து வேழமாகுமென்பதை நீறுகொண்ட நெருப்பாய்ப் பூத்திருக்கும் தமிழினத்தின் இன்றைய போர்க்கோலமே சான்று பகரும்.

காலத்தின் கண்ணாடியாய் கவிஞர்கள் திகழ்வதுபோன்று வரலாற்றின்கட்டாயமாக தலைவர்கள் மலர்வதைப்போன்று தமிழினத்தின் விடிவிற்காய் மலர்ந்த நம் தலைவன் இவர். கூறுபட்டு-கொள்கையில் வேறுபட்டு பிரதேசங்களால் மாறுபட்டு - காய்தல் உவத்தல்களால் கவரப்பட்டு - இரு தசாப்தங்களாய் பிளவுபட்டு நின்ற தமிழினத்தை ஒருமுகப்படுத்தி - ஒன்றுபட்ட தலைமையின் கீழ் இணைப்பதற்காய் ''மதுரமான நாதத்தைஎழுப்ப இருபுறமும் இடிபடும் மத்தளத்தின் நிலை'' நின்று புதிய சகாப்தத்தை படைத்த ஒற்றுமையின் சின்னமவன். உறுதியின் மறுவுருவம் அவன். உடல் பொருள் ஆவி அத்தனையையும் அன்னை தமிழிற்காய் அர்ப்பணித்த பண்பின் சிகரமவன், பணிவின் சின்னமும் அவனே.

இன்றைய வேதனையான சூழ்நிலையில் ஆலயவழிபாட்டுடன் நெஞ்செல்லாம் - நினைவெல்லாம் எம்மினத்தின் ஏற்றமிகு வாழ்வை மட்டுமே எண்ணியவராய் -திண்ணிய உறுதியுடன் துவளாது தொடர்ந்தும் தன் பங்கை - பணியை ஆற்றிடும் உணர்வோடுஇல்லத்தில் அமைதியாக பிறந்தநாளை கொண்டாடுகின்றார். நெடுங்காலம் வாழ்ந்து நாடும் - நற்றமிழர் ஏடும் போற்றிட தமிழினத்தின் பீடை தீர்த்திட பெரும்பணியாற்றிட எல்லாம்வல்ல இறைவன் நீண்ட ஆயுளை நம் தலைவனுக்கு அளித்திடுமாறு அன்புத் தமிழ்ஈழ நெஞ்சங்கள் பிரார்த்திக்கிறோம்.

சிவ. பிரியதர்சன்.

# ஜனாதிபதி கூட்டும்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

வாக்கச் சொல்லி ஒருவித பணிப்பும்விடவில்லையே என்று சுட்டிக்காட்டுவார். சட்ட வலுவற்ற அரசு வடக்கு கிழக்கில் அதிகாரம் செலுத்துவது தான் இந்தப் பயங்கர வாதத்திற்குக் காரணம் என்று கூறி விடுவார்.

அப்பொழுது ஜனாதிபதி வடக்கு கிழக்கில் 95 சத விகித மக்கள் எம்மை ஆதரிக்கிறார்கள் என்பார்.

ஜி. ஜி. பதில் கொடுப்பார். மெத்த நன்று. சட்டவலுவற்ற அரசமைப்புச் சட்டத்திற்குச் சாதக வாக்கைக் கோரி (Seeking an Affirmative Vote) ஒரு அபிப்பிராய வாக்கெடுப்பை நடாத்தி அந்த 95 சத விகித மக்களின் ஆதரவைப் பெற்றவுடன் பயங்கரவாதம் சூரியனைக்கண்ட பனிபோல அகன்றிடுமே என்று கூறி முடிப்பார்.

வேறும் ஒரு விடயம் எடுப்பார். பயங்கரவாதம் நிச்சயமாக ஒழிக்கப்படல் வேண்டும். ஆனால் யார் பயங்கரவாதி என்று முதலில் கண்டுபிடிக்க வேண்டும். திருகோணமலையில் தமிழர்களே ஏராளமாகக் கொலைசெய்யப் பெற்றிருக்கின்றனர்.

## ஜி. ஜி. எழுப்பும் கேள்விகள்

தீ வைப்பது மகா பெரும் குற்றம். புகைவண்டிக்குத் தீ வைத்தது மகாபெரும் குற்றம். ஆனால் தீ வைக்கக் காட்டிக் கொடுத்தது யார்?

யோகேஸ்வரன் வீட்டிற்குத் தீ வைத்தது யார்? பெரிய கடைக்குத் தீ வைத்தது யார்? நூலகத்திற்குத் தீ வைத்தது யார்? கந்தர் மடத்தில் குடிசைகளுக்குத் தீ வைத்தது யார்? திருகோணமலையில் ஏழை மக்களின் குடிசைகளுக்குத் தீ வைத்தது யார்? தீ வைக்கும் வழக்கத்தை உண்டாக்கியவரை முதலில் பிடித்து உரிய தண்டனை வழங்க வேண்டும். தீ வைத்த நபரை அடையாளம் காட்ட முடியாதாயின் அந்த நபர் அல்லது நபர்கள் சேர்ந்திருந்த குழாம் முழுவதையும் கூட்டோடு தண்டித்தல் வேண்டும் இப்படி வாதிட்டிருப்பார் ஜி. ஜி.

## உலகறியச்செய்யலாம்

பாராளுமன்றத்தில் நிகழ்ச்சி நிரலின்படிதான் விடயங்களைப் பேசமுடியும். வட்டமேசை மாநாட்டில் அந்தவிடயத்தைப் பூரணமாகப் பேசலாம். பயங்கரவாதத்தின் காரணத்தை முதலில் காண வேண்டும் என்று கூறினால் எவரும் அதை மறுக்கமுடியாது. காரணத்தை, அதுதான் சட்ட வலுவற்ற அரசு அதிகாரம் செய்வது என்பதை நிரூபிக்கலாம்.

வட்டமேசை மகாநாட்டில் கூறுவது உலகப் பத்திரிகைகளில் இடம்பெறும். தமிழனின் வழக்கை எடுத்துரைக்க அரிய சந்தர்ப்பம் இது.

வட்டமேசை மகாநாட்டில் பங்கெடுக்காதது பயங்கரவாதத்திற்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்பதை ஊர்ஜிதம் செய்யும். வேறும் பேச்சு வார்த்தைகளில் பங்கெடுக்காது பகிஷ்கரிப்பது மார்க்ஸியவாதிகளின் ஒரு தந்திரம். தமிழன் மார்க்ஸியவாதி என்று உலகத்திற்கு எடுத்துரைப்பதற்கு வாய்ப்பளிக்கப்பெற்றிருக்கிறது.

பயங்கரவாதத்தின் காரணத்தைக் கண்டுபிடித்தல் வேண்டும்; பயங்கரவாதி யார் என்று அடையாளங் காணவேண்டும் என்ற இந்த இரண்டு வாதத்தையும் எவர் ஆட்சேபிக்கமுடியும்? வட்டமேசை மகாநாட்டில் பங்கெடுக்காதது பெரும் தவறு.

# சந்தானமாதா ஆலய வெற்றி விழா

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுரை, தணுவில் சந்தான மாதா ஆலய 25வது ஆண்டு திருநாள் கொண்டாட்டங்களும் நவநாள் பிரார்த்தனைகளும் இம்மாதம் 17ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

தினமும் மாலை திருப்பலிப் பூசை கரம்பன் சுருவில் பங்குத் தந்தை வண. லோறன்ஸ் சேவியர் அடிகளால் ஒப்புக் கொடுக்கப்பட்டு வருகிறது. இம்மாதம் 26ம் திகதி செவ்வாய்க் கிழமை காலை திருப்பலிப் பூசையுடன் நிறைவு பெறும்.

---

### 1-வது கிரி. டெஸ்ட்

# இங்கிலாந்து வெற்றி!

லண்டன் ஜூலை 19

இங்கிலாந்து நியுஸிலாந்து அணிகளுக்கிடையில் இலண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து 189 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

இறுதி ஸ்கோர்:-
இங்கிலாந்து: 209 , 6-446
நியுஸிலாந்து: 196 , 270

---

# சேதம் பற்றி மதிப்பீடு

(பேராதனை)

பேராதனை பல்கலைக்கழகத்தின் உடைமைகளுக்கு பல லட்சம் ரூபா சேதம் மாணவர்களினால் விளைவிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவரும், உயர்கல்வி அமைச்சின் செயலாளருமான பேராசிரியர் ஸ்ரான்லி கல்பகே தெரிவித்துள்ளார்.

இந்த சேதத்தின் விபரங்கள் பற்றி பல்கலைக்கழக அதிகாரிகள் இப்போதுமதிப்பீடுசெய்து வருகின்றார்கள்.

### அரசின் குளங்கள் புனரமைப்பால்

# மூதூர் பகுதியில் 3,000 ஏக்கரில் விவசாயம்!

(திருகோணமலை)

அல்லை, பேருவெளி குளங்களை அரசாங்கம் புனரமைப்பது மூலம் மூவாயிரம் ஏக்கர் புராண வயல்களில் விவசாயம் செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்படும்.

மூதூர் உதவி அரசாங்க அதிபர் திரு. சி, எம். கணேசலிங்கம் திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டத்துக்கு சமர்ப்பித்த சிபார்சில் மேற்கண்டவாறு தெரிவித்து உள்ளார். திருமலை அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பெர்னாண்டோ விடுத்த கோரிக்கை ஒன்றைத் தொடர்ந்தே இச் சிபார்சு செய்யப்பட்டது. அச் சிபார்சில் தொடர்ந்து கூறப்பட்டுள்ளதாவது:

நீண்டகாலமாக இக்குளங்களைப் புனரமைக்கும்படி புராண வயல் சொந்தக்காரர்கள் கோரிக்கை விடுத்த போதிலும் இதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. இதனாலே மூதூர் பிரதேசத்தில் நெற் உற்பத்தி பின்தங்கி உள்ளது எனலாம்.

மூதூரில் ஒரு பசளைக் களஞ்சியமும் அத்தியாவசிய தேவை ஆகும். மூதூர் பிரதேச விவசாயிகள் பெருஞ்செலவில் கந்தளாய் சென்று தமக்குத் தேவையான உரத்தினைப் பெறும் கஷ்டநிலையில் வாழ்கிறார்கள். இதனாலே இப்பிரதேசத்தில் நெற்செய்கைக்கோ உபஉணவுப் பயிர்ச் செய்கைக்கோ உரிய வேளையில் பசளை பெறமுடியாது அல்லல் அடைகின்றார்கள். எனவே மூதூரில் ஒரு உரக்களஞ்சியம் அமைக்கப்பட வேண்டும். இதற்குத் தேவைப்படும் காணி உண்டு.

கிண்ணியாவில் தோணா என்ற பகுதியில் இருந்து மூதூர் வரைக்கும் எட்டுமைல் தொலைவில் உள்ள தெருப் பாதை திருத்தப்படுவது அவசியமாகும். 1957 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தைத் தொடர்ந்து இப்பாதைக்கு உரிய திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவில்லை. மூதூர் பிரதேசம் தகுந்த போக்குவரத்து வசதியின்மை காரணமாகவே இன்று ஒரு பின்தங்கிய பிரதேசமாக இருப்பதை எம்மால் உணரமுடியும்.

வீரடாநகர், இக்பால்நகர், பட்டாளிபுரம், நல்லூர், பள்ளிக்குடியிருப்பு ஆகிய கிராமங்கள் குடிதண்ணீர்வசதியின்மை காரணமாகக் கஷ்டப்படுவதால் குடிதண்ணீர் விநியோக நடவடிக்கை உள்ளிக்குளப் பகுதியில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

[சூ]

# வருடாந்த இராப்போசனம்

(இருப்பிட்டி)

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தின் க. பொ. த உயர்தர வகுப்பு மாணவர்களின் வருடாந்த இராப்போசன விருந்து பசாரம் எதிர்வரும் புதன்கிழமை நடைபெறும்.

மாணவ மன்ற தலைவர் ச. சிவகுமார் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கொத்தணிப் பாடசாலை அதிபர் திரு சி. இராஜநாயகம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். வித்தியாலய மேலதிக அதிபர் திரு எஸ். எஸ். செல்லத்துரை விழாவினைத் தொடக்கி வைப்பார்.



## உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள்:
# கூட்டணிக்குஎதிரான வழக்கு; தமிழ் காங்கிரஸ் வாபஸ்!

(கொழும்பு)

யாழ்ப்பாண மாநகர சபை, சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, திருகோணமலை நகர சபைகளுக்கு நடைபெற்ற தேர்தல் தொடர்பாக கூட்டணிக்கு எதிராகத் தாக்கல் செய்த வழக்குகளை தமிழ்காங்கிரஸ் வாபஸ் பெற்றுள்ளது.

இவ்வழக்கு அப்பீல் நீதிமன்றத்தில் நீதியரசர்கள்:பி. அத்துக்கோரளை, ஜி. பி. எஸ். பி. சில்வா ஆகியோர் முன்னிலையில் எடுக்கப்பட்டது.

மனுதாரின் சிரேஷ்ட சட்டத்தரணி எச்.எல். டி. சில்வா இதுவரை வடக்கில் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் சபைக்கு செல்லாததிலும் இனிமேலும் செல்ல மாட்டார்கள் என்ற நம்பிக்கை இருப்பதாலும் சிலர் ராஜினுமா செய்துள்ளதாலும் இவ்வழக்குகளை வாபஸ் பெறுவதாகத் தெரிவித்தார்.

செலவுதொகை வழங்கவேண்டுமென கூட்டணி சார்பில் செய்த விண்ணப்பத்தை நீதியரசர்கள் நிராகரித்தனர். (இ)

## சில்லாலை சனசமூக நிலைய நிர்வாகிகள்

(பண்டத்தரிப்பு)

சில்லாலை வடக்கு நல்லாயன் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம்நடைபெற்றபோது புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு கே. கிளிபேட் வில்லியம் ராஜா, உபதலைவர்: திரு செ. அலோசியஸ், செயலாளர்: திரு எஸ். சௌந்தரம் உபசெயலாளர்: திரு எஸ். ஜோசவ் அன்ரன், பொருளாளர்: திரு அ. ஜோசவ் இம்மானுவல், நூல்நிலையப் பொறுப்பாளர்: திரு ம. லின்ரன், செயற்குழு உறுப்பினர்களாக ஆறுபேர் தெரிவு செய்யப்பட்டனர்.

## 'பண்ணிசை வரலாற்றுத் தத்துவம்'

[சுழிபுரம்]

திருமுறைக் கலாநிதிஎஸ்.கே. சிவபாலன் 'பண்ணிசை வரலாற்றுத் தத்துவம்' என்னும் நூலை எழுதி வெளியிட்டுள்ளார். இந்நூல் சுத்தானந்தா பதிப்பக வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது. காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அருளிய ஆசியுரை நூல் முகப்பில் இடம் பெற்றுள்ளது. இந்நூல் அறிமுக விழாவொன்றை இம் மாதக்கடைசியில்வழக்கம்பரை சனசமூக பஜனைச் சபையினர் நடாத்தவுள்ளனர்.

## பண்ணுகம் கிராம அபிவிருத்தி சங்கம்

[சுழிபுரம்]

பண்ணுகம் கிராம அபிவிருத்திச்சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் பண்டிதர் அ. ஆறுமுகம் தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. அறிக்கைகள் யாவும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர். புதுவருட உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது. தலைவர் சோ. க.வேலாயுதம் காரியதரிசி ச. நமசிவாயம் தனாதிகாரி; இ. தம்பையா.

எட்டுப்பேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

# முல்லைத்தீவு மாவட்டத்தில் பனை அபிவிருத்தி ஆய்வு

## ஐ.நா. நிபுணர் சம்பந்தம்நடத்துவார்

(வண்ணார்பண்ணை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பனை அபிவிருத்தி வேலைகள் தொடர்பான ஆய்வொன்றை நடத்துவதற்கு உலகநலவாய நாடுகளின் பனைத் தொழில் ஆய்வாளரும், இந்திய விற்பனைத் தொழில் நிபுணருமான திரு. கே. சம்பந்தம் இம் மாதம் 27-ம், 28-ம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆய்வு நடத்தவுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே ஞானச்சந்திரன், பனை அபிவிருத்திச் சபைத்தலைவர் திரு. க. நடராசா ஆகியோர் திரு. சம்பந்தத்துடன் நடத்திய ஆலோசனையைத் தொடர்ந்து திரு. சம்பந்தம் பனைத் தொழிலில் முல்லைத்தீவு மாவட்டம் எப்படிப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது தொடர்பான அறிக்கை ஒன்றை அரசாங்க அதிபருக்குச் சமர்ப்பிக்கவிருக்கிறார்.

## பத்திரிகையாளருக்கு டிப்ளோமா பயிற்சி!

(கொழும்பு)

பத்திரிகையாளர்களுக்கு டிப்ளோமா பயிற்சி வழங்குதல், கருத்தரங்குகள், கூட்டம்நடத்துதல் என்பன தொடர்பாக உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர் களுக்கான நிலையம் ஒன்றும்அமைக்கப்படவுள்ளது. இந்நிலையம் கோட்டையில் அமைதியான ஒரு இடத்தில் அமைக்கப்படுமெனத் தெரிகிறது.

இக்குழு இலங்கையில் பத்திரிகையாளர்களுக்கு கூடிய பயிற்சியை வழங்குதல் என்பதனையே தமது முழு நோக்கமாகக் கொண்டு செயற்படும். (சூ)


புதிய லக்ஸ்பிறே 500




100 கிராம் மேலதிகம்.

500 கிராமிற்கான விலையோ 26/00 ரூபா மட்டுமே. செறிவும், செழுமையும் மிக்க ஊட்டச்சத்து வாய்ப்பாடு III புதிய லக்ஸ்பிறே (26% பாற் கொழுப்பு நிறைந்தது)

★ ஈரலிப்பு, துர்நாற்றம், பக்ரீறியாத்தாக்கம் என்வற்றைத்தடை செய்யத்தக்க முப்படைகளான பையில் அடைக்கப்பட்டு வெளிவருகிறது.

★ நைதரசன் வாயுவுடன் சேர்ந்து அடைக்கப்படுவதால் நீண்ட காலச் சேமிப்பிற்கு உகந்தது.

தீவு பூராவும் தாராளமாகக் கிடைக்கிறது.

எடை போட்டுப் பார்க்க சில உண்மைகள்.

சந்தைப்படுத்துவோர்

லங்கா மில்க் ஃபூட்ஸ் (சீ.டப்ளியூ.ஈ) லிமிடெட்.

வெலிசர, ருகம, இலங்கை.

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 4-15, 7-00
சனி, ஞாயிறு 1-30
சிவகுமார்-சரிதா
**வண்டிச்சக்கரம்**

**சாந்தி** யாழ்.
தினசரி 3 காட்சிகள்
கடைசி வாரம்
**தியாகம்**
(கலர்)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
6-30, 9-30
பிரதாப்— சோபா
**மூடுபனி**

**லிடோ** (யாழ். நகர்)
சிவாஜி-மஞ்சுளா
**மன்னவன் வந்தானடி**

**ஸ்ரீதர்** தினசரி 10-30, 2-30, 6-00
(யாழ்ப்பாணம்)
இன்றுமட்டும்
ரஜனிகாந்த்— **காளி**
21-25 வரை காதலிக்க நேரமில்லை

**ராணி** தினசரி 10-30, 2-30, 6-15 மட்டும்
(யாழ். நகர்)
• ஜனத்திரள் நிறைந்த 9-வது வாரம்
கமலஹாசன் - அம்பிகா
**சகல கலா வல்லவன்**

**றீகல்-Regal** தினசரி 10-30, 2-00, 4-30
7-15 P. M.
இன்னும் 5 தினங்கள் மட்டும்
கபீர்பேடி....சனம் சூரி... நடிக்கும்
**"கேர்ல் (f)ப்ரம் இந்தியா"**
**GIRL FROM INDIA**
TECHNICOLOR
வயது வந்தவர்கள் மட்டும்

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - மஞ்சுளா - லதா
**உலகம் சுற்றும் வாலிபன்**
21-7-83 முதல் சிவாஜி-முத்துராமன் விஜயா
நெஞ்சிருக்கும்வரை
விரைவில் வருகிறது
ஆனந்தராகம்

**ஹரன்** (யாழ்.நகர்)
தினசரி 10-30, 1-30, 6-15



சிவாஜி, சரிதா,
ராஜீவ், ராதா
V. K. ராமசாமி,
சுரேஷ்
நடித்த
**துணை**
டைரக்ஷன்: துரை (கலர்)


# இன்றைய பலன்

ஆடி 4ம் திகதி
புதன்கிழமை
(20—7—83)

மேடம்: வயிற்றுக்கோளாறு தோன்றக்கூடும் விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும் வேவுகணை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பார்கள் நண்பர்களுடன் மோதல் ஏற்படும்.

இடபம்: களஸ்திர வழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு காதலர்கள் வாழ்வில் தித்திப்பான சம்பவங்கள் இடம்பெறும் கல்வி முன்னேற்றமுண்டு இல்லத்தில் இனிமை தவழும்.

மிதுனம்: பணத்தைக் கொடுத்து பகையைச் சம்பாதித்துக் கொள்வீர்கள் தொழில் துறையிலும் சோர்வு தென்படுகின்றது நண்பர்கள் மூலம் புதிய தொல்லைகள் தோன்றக் கூடும்.

கடகம்: பொதுப்பணி மூலம் புகழுக்கு இடமுண்டு அாசியல்வாதிகளுக்கு அதிர்ஷ்ட தினம் பிதாவழி மூலம் பொருள்வரவு கிடைக்கும் பரம்பொருளின் அருளுக்கும்இடமுண்டு.

சிங்கம்: தொழில் துறையில் புதிய உத்வேகம் காணப்படும் எந்த நிலைமையையும் கட்டுப் படுத்துவதில் தனிப்புகழ் அடைவீர்கள் வரவிலும் திருப்தி காணப்படும்.

கன்னி: முத்தான சந்திப்பு ஒன்று கிடைக்கும் முதியவர் ஒருவரின் ஆதரவும்கிடைக்கும் செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும் புதுமனை கட்ட எண்ணம் பிறக்கும்.

துலாம்: கண்துடைப்பு வேலைகளால் நலிவுக்கு இடமுண்டு குடும்பத்தில் பூசல்கள் தோன்றிமறையும் உடல் நலம் சிறிதுபாதிக்கப்படலாம்உணவு விடயத்தில் அதிக கவனம் வேண்டும்.

விருச்சிகம்: இனிக்கப் பேசுவோர் விடயத்தில் எச்சரிக்கையுடன் இருக்கவும் பிறந்தகத்தின் நினைவு திடீரெனத் தலை தூக்கும் சோர்வு தென்படும் எதற்கும் மனத்திடம் வேண்டும்.

தனு: கட்டிவெல்லம் போல் இனிக்கும் வாழ்க்கை காதலர் எண்ணம் கைகூடும் பேச்சுவன்மையால் பெரும் புகழ் கிடைக்கும் பெரிய இடத்துச் சிநேகிதம் செல்வாக்கைதேடித்தரும்.

மகரம்: துஷ்டர்கள் உங்களை சங்கடத்தில் மாட்டி வைப்பார்கள் பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு வழக்கு விவகாரங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்,

கும்பம்: ஆராய்ச்சியாளர்களுக்கு பொன்னான தினம் அறிவுத்தாகம் மேலிடும் சிலர்புதிய வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்வதில் மகிழ்ச்சி உண்டு.

மீனம்: வட்டிக்கடை வைத்திருப்பவர்களுக்கு அது மேலும் குட்டி போடும் பண விவகாரங்களில் மகிழ்ச்சிஉண்டு புத்திரர் ஒருவர் விளையாட்டில் ஆர்வமுண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை
**க. வேலுப்பிள்ளை**

## ஞானசம்பந்தன் கொலை வழக்கு

(கொழும்பு)

பொலிஸ் கான்ஸ்டபிள் ஞானசம்பந்தன் கொலை வழக்கு கொழும்புமேல் நீதிமன்றத்தில் நீதிபதி திஸ பண்டாரநாயக்கா முன்னிலையில் எடுக்கப்பட்டு செப்டம்பர் 30ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் குட்டிமணி, ஜெகன் சிறிகுமார் ஆகியோர் எதிரிகளாவார்.

(இ)

சனசமூக...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

இளைஞர் மட்டத்தில் உண்மையான சமூகத்தொண்டர்களை உருவாக்கவேண்டும் இளைஞர் மத்தியில் சமய உணர்ச்சியும் ஊட்டப்படவேண்டும்.

இக் கூட்டத்தில் கிராமிய பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது பற்றியும், மரம்நாட்டும் இயக்கத்தை ஆரம்பிப்பது பற்றியும் தீர்மானிக்கப்பட்டது சமாஜச் செயலாளர் திரு. ச. செந்துராசா நன்றியுரை கூறினார்.


23-7-83 வரை மட்டும்
**மனோகரா** (யாழ். நகர்.)
தினசரி 3 காட்சிகள்
கமலஹாசன்-ஸ்ரீதேவி
**வாழ்வே மாயம்**
(ஈஸ்மன்கலர்)

**ராஜா** (யாழ்நகர்)
படம் பார்ப்பவர்களின்
வசதியை முன்னிட்டு
காட்சி நேரங்கள்
பின்வருமாறு:-
10-30, 1-30, 6-00
பாக்கியராஜ்- அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
நடித்த



**அந்த 7 நாட்கள்**
(கலர்)
கதைவசனம், டைரக்ஷன்
பாக்கியராஜ்


## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம், சிவப்பிரகாசம் வீதி இல. 12ல் வசித்த காலஞ் சென்ற ஐயம்பிள்ளை சின்னையா என்பவரின்மரணசாதன விடயத்தில்

மரணமெய்தியவர் யாழ்ப்பாணம் சிவப்பிரகாசம் வீதி இல. 12ல் வசிக்கும் ஐயம்பிள்ளை சின்னையா கைம்பெண் மகேஸ்வரி

மனுதார்

மரணச் சொத்து
நியாயாதிக்கம் இல. 3734

மேற்படி மரணமெய்தியவரின் மரணசாதனம் நிரூபிப்பதற்கென மேற்படி இலக்கங் கொண்ட சொத்தறுதிசார் வழக்குஇந் நீதிமன்றத்தில்தாக்கல் செய்யப்பட்டுள்ளதெனவும் அதன் நிமித்தம் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகிறது. மேற்படி பின்னுறுதிக்கட்டளை முற்றுக்கப்படாதென்பதற்கு ஏதாவது காரணம் இருப்பின் இவ்வழக்கில் அக்கறையுடையவர் எவரேனும் இந்நீதிமன்றத்தில் 1983ம் ஆண்டு யூலை மாதம் 22ந் தேதி முற்பகல் 9 மணிக்கு தோன்றி அவ்விதம் செய்யும்படி இத்தால் வேண்டப்படுகின்றனர்.

நீதிமன்றக் கட்டளைப்படி

தா. குலஞானம்
பதிவாளர்

1983-06-27.

8033


# KEEN INSTITUTE

மணியம்ஸ் பில்டிங்,
ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.

பின்வரும் வகுப்புகள் நடைபெறுகின்றன.

**A/L 84-85 கலை வர்த்தக வகுப்புகள்**

FRENCH/GERMAN — CONVERSATION/GRAMMER
செய்முறைப் பயிற்சிகளுடன்

1. DIPLOMA IN HOTEL MANAGEMENT AND TOURISM,
2. றேடியோ, ரெலிவிசன் தொழில்நுட்ப வகுப்புகள்.
3. TELEX OPERATORS.
4. எலக்றிக் வயரிங்.
5. BUILDERS QUANTITIES PART I AND II FOR CITY AND GUILDS LONDON EXAMINATION 1984

**புதிய வகுப்புகள் ஆரம்பம் 28-7-83**

AIR CONDITION MECHANISM
இரண்டுமாத வகுப்புகள்

கட்டணம் ரூபா 450/-
செய்முறைப்பயிற்சி ரூபா 350/-

**பொதுப்பயிற்சி நெறி வகுப்புகள்**

(GENERAL TRAINING COURSES)
RADIO, T V. ELECTRICAL AND AIRCONDITION

ஒரு மாத வகுப்பு ரூபா 350/-
செய்முறைப் பயிற்சி ரூபா 100/-

**இலவச ஆலோசனை:**
T. V. ANTENNA (SPECIAL DESIGN)
AIR CONDITION — FITTING — SERVICE

# KEEN INSTITUTE
(ELECTRONIC DIVISION)

## யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் சடலத்தை ஒப்படைக்குமாறு இன்று

# தாயார்சார்பில் மனுதாக்கல்!

(புலோலி)

பருத்தித்துறை வயல்வெளி கிணற்றிலிருந்து துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டு, மரண விசாரணையின் பின் புதைக்கப்பட்ட வல்வெட்டித்துறை சோமசுந்தரத்தின் சடலத்தை தம்மிடம் ஒப்படைக்குமாறு, அவரது தாயார் முத்துலட்சுமி சார்பில் யாழ். மாவட்டநீதிமன்றத்தில்இன்று காலை மனு ஒன்று தாக்கல் செய்யப்படும்.

இம்மனுவை சட்டத்தரணி ஸ்ரீசிவாயா இன்று தாக்கல் செய்வார்.

பருத்தித்துறை நீதவான் திரு. கே. கணபதிப்பிள்ளையின் பணிப்பைத் தொடர்ந்து, தோண்டி எடுக்கப்பட்ட சடலத்தை இறந்தவரின் தாயார் முத்துலட்சுமி, தமது மகன் சோமசுந்தரத்தின் சடலம் என அடையாளம் காட்டினர்.

இதைத் தொடர்ந்து பருத்தித்துறை நீதிமன்றத்தில், மரண விசாரணை நடைபெற்றது.

பருத்தித்துறை நீதிமன்றப் பொலிஸ் உத்தியோகத்தர் எஸ். ராசரத்தினம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: ''நான்நீதிமன்றக்கட்டளைப்படி நேற்று யாழ். வைத்திய அத்தியட்சகரிடம் சென்று சடலம் அடக்கம் செய்த இடத்தைக் காட்டுமாறு கேட்டேன். வைத்திய அத்தியட்சகர், ஊழியர் இடத்தைக் காட்டினார்கள். சடலத்தைத் தோண்டிஎடுத்த போது முத்துலட்சுமி, அச்சடலத்தை மகனுடையது என அடையாளம் காட்டினர்.

தாயார் முத்துலட்சுமி தமது மகனின் சடலத்தை தம்மிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இறந்தவர் நலனைக்கவனிக்க ஆஜரான சட்டத்தரணிகள் ஆர். ஸ்ரீசிவாயா, ஆர். ரத்தினசிங்கம் ஆகியோர் சடலத்தைத் தாயாரிடம் ஒப்படைக்க பொலிஸார் ஆட்சேபம் தெரிவிக்கவில்லையென்று, சடலத்தை தாயாரிடம் ஒப்படைக்குமாறு கட்டளையிடுமாறு கேட்டுக்கொண்டனர்.

நீதவான் கே. கணபதிப்பிள்ளை, சடலம் புதைக்கப்பட்ட இடம், யாழ். மாவட்ட நியாயாதிக்கத்திற்குட்பட்டிருப்பதால் சடலத்தை அந்த இடத்திலிருந்து வேறு இடத்திற்குக் கொண்டுசெல்வதற்கு இடுகாட்டுச் சட்டம் 37ம் பிரிவின்படி புதைக்கப்பட்ட பகுதியைக் கொண்டிருக்கும் மாவட்ட மன்றில் கட்டளை பெறவேண்டும் என்று தெரிவித்தார். சடலத்தைத் தாயாரிடம் ஒப்படைக்க யாழ். மாவட்ட நீதிமன்றம் கட்டளை வழங்க ஆட்சேபம் இல்லை என்றும் தெரிவித்தார். (க)

## சின்னத்தம்பனை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளது.

வீட்டுக்கதவு தட்டும் சத்தம் கேட்டது. வீட்டக்காரரின் மகன் கதவைத் திறந்த போது தண்ணீர் குடிக்கத் தரும்படி அங்கு நின்று கொண்டிருந்த இளைஞர்கள் கேட்டார்களாம்!

கதவைத்திறந்து கொண்டு உள்ளே தண்ணீர் எடுக்கச் சென்ற போது வெளியே நின்ற இளைஞர்கள் வீட்டுக்குள் நுழைந்து துப்பாக்கி முனையில் துப்பாக்கியைத் தரும்படி கேட்டார்கள்! வீட்டுக்காரரின் மகன் தனக்குத் தெரியாது என்று சொல்லவே தந்தையை எழுப்பி துப்பாக்கியைத் தரும்படி கேட்டார்கள். துப்பாக்கியுடன் நின்ற ஐந்து இளைஞர்களும் வீட்டின் மூலை முடுக்கெல்லாம் சோதனையிட்டார்கள்! கடைசியில் நெல் மூடைக்குள் துப்பாக்கி பதுங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு பிடித்தனர் அனுமதிப் பத்திரம் பெற்று அவ்விவசாயி வைத்திருந்த துப்பாக்கியை எடுத்துச் சென்றூர்கள்!

வவனியா பொலிஸில் இது பற்றிப்புகார் செய்யப்பட்டுள்ளது.

வவனியா, செட்டிகுளம், ஆண்டியா புளியங்குளம் ஆகிய பகுதிகளில் பொலிஸார் ஜீப் மூலம் அனுமதிப் பத்திரம் பெற்ற துப்பாக்கிகளை வவனியா பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.


## மரண அறிவித்தல்

### திரு. V. பாலசுந்தரம்

இ. போ. ச. ஓய்வுபெற்ற கணக்காளர் பாலசுந்தரம் அவர்கள் காலமாகிவிட்டார். அன்னர் ஜானகியின் அன்புக்கணவரும், பாலசுந்தரம், செல்வராஜா, விஜயகுமார், விவேகானந்தன், பத்மாவதி றவீந்திரன், சிவகாமி ஆகியோரின் அன்புத் தந்தையும் ரதியின் மாமனருமாவார். ஈமைக்கிரியைகள் 20ம் திகதி (இன்று) புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

181, பலாலி வீதி,
கோண்டாவில். 8052

## மரண அறிவித்தல்

### திருமதி கமலம்மா நடராசா

கந்தர்மடம், மணல்தறை ஒழுங்கை காலஞ்சென்ற (கணக்கர் நடராசா) த, நடராசா அவர்களின் பாரியார் கமலம்மா (கமலக்கா) 19-7-83 காலை 9-00 மணியளவில் இறைவனடி சேர்ந்துவிட்டார். இவர் மதிவதனநாயகி, கெங்காதரதேவி ஆகியோரின் அருமைத் தாயாரும், பரஞ்சோதி (யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்), மதிவதனசேகரன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும், அரவிந்தன், பிரசாந்தி, சஞ்சீவன் ஆகியோரின் அருமைப் பேத்தியாருமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (20-7-83) காலை 10-00 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும்.

18/1, மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்,

தகவல்:
க. பரஞ்சோதி.

8054


## ரூபவாஹினியில் இன்று

மாலை

6-00 நிகழ்ச்சி முன்னோட்டம்.
6-02 கல்வி நிகழ்ச்சி தாவரவியல்.
6-30 கல்வி நிகழ்ச்சி [இயற்கை விஞ்ஞானம்].
6-45 கார்ட்டூன் திரைப் படம்.
7-00 செய்தி மஞ்சரி (தமிழ்)
7-15 அபிவிருத்தி தொடர்பான நிகழ்ச்சி.
8-15 செய்திமஞ்சரி [சிங்களம்].
8-45 'வீரத்திருமகன்' தமிழ்ப் படம்.
9-30 செய்தி மஞ்சரி (ஆங்கிலம்).
9-45 தமிழ்ப்படஒளிபரப்புத் தொடரும்.

## இன்று

வேலணை துரைச்சுவாமி மத்திய மகாவித்தியாலய உயர்தர மாணவ மன்றபகல் போசன விருந்து இன்று பகல் இக்கல்லூரியில் நடைபெறவுள்ளது இவ்வைபவத்திற்கு திரு. என். வரதராஜன் தலைமை தாங்குவார் யாழ். நகரின் பல பாகங்களிலுள்ள கல்லூரி உயர் மாணவர்கள் இவ்வைபத்தில் கலந்து கொள்வர். (கெ)

ஃ ஃ ஃ

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆரம்ப பாடசாலையின் இல்லங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று புதன்கிழமை காலை கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் முன்னாள் விஞ்ஞான ஆசிரியர் திரு. ஆர். கே. இராஜசேனனும் பாரியாரும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

திருமதி டி இராஜசேனன் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்குவார். (மா)

## கூட்டணி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டிற்கென பேசாலைப் பகுதியில் 4500 ரூபாவும் தலைமன்னார் பகுதியில் 500 ரூபாவும் எருக்கலம்பிட்டிப் பகுதியில் 3 ஆயிரம் ரூபாவும் மாந்தைப் பிரிவில் 5 ஆயிரம் ரூபாவும், ஆத்திமோட்டை, புதுக்குளம், கோவில்குளம் ஆகிய பகுதிகளில் 3 ஆயிரம் ரூபாவும், நானாட்டான் பிரிவில் 6 ஆயிரம் ரூபாவும் மன்னார் பட்டினத்தில் 2 ஆயிரம் ரூபாவும் நிதி சேகரிக்கப்பட்டுள்ளது.

## முன்னாள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதைத்தொடர்ந்து ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று அவரை சந்திக்க திரு. சு. நடராசா முடிவுசெய்துள்ளார்.

இம்மாதம் 21ம் தேதி வியாழக்கிழமை, திரு, சு. நடராசா, ஜனாதிபதியை சந்திப்பதற்காக செல்லவிருக்கிறார். (மா)

## கூட்டணி இன்று காலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டாவது கடிதமொன்றை அனுப்பியிருந்தார். இக்கடிதம் அவசரமவசரமாக 'ஹெலிகோப்டர்' மூலம் மன்னாரில் மாநாட்டு ஏற்பாடுகளை கவனித்துக்கொண்டிருந்த திரு. அமிர்தலிங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

திரு. அமிர்தலிங்கம் உடனடியாக மன்னாரிலிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்து தங்கள் முடிவை மறுபரிசீலனைசெய்தனர்: ஆனாலும் இக்கூட்டத்தில் எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை.

இன்று காலை, கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கத்தின் இல்லத்தில் இறுதிமுடிவு எடுக்கப்படும்.

இன்று அதிகாலை 3 மணியளவில் கூட்டணி எம். பிக்கள் காரில் கொழும்புக்கு புறப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. கோப்பாய் எம். பி. திரு. எம். ஆலாலசுந்தரம் செல்லமாட்டார் என்று தெரிகிறது. எதிர்க்கட்சித்தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம், யாழ். எம். பி. திரு. வி. யோகேஸ்வரன், உடுப்பிட்டி எம். பி. திரு. ரி. இராஜலிங்கம், மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் ஆகியோர் இன்று அதிகாலை செல்வார்கள் எனத் தெரிகிறது.

ஜனாதிபதி மாளிகையில் இன்று காலை 11-30 மணிக்கு வட்டமேசை மகாநாடு ஆரம்பமாகும். இ. தொ. க (அரசியல் பிரிவு) கலந்துகொள்வதென முடிவு செய்துள்ளது. சுதந்திரக் கட்சி கலந்து கொள்வதில்லை என முடிவு செய்துள்ளது. இச்செய்தி அச்சுக்குப்போகும் வரை கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி எவ்வித முடிவும் எடுக்கவில்லை. (கல்வி-நி)

## மீசாலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுசெல்லப்பட்டு பிற்பகல்4-30மணியளவில் எரிக்கப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று அடையாளம்காணப்பட்ட மற்ற இளைஞரான இராமநாதன்அருள்நாதன் மயிலிட்டி வடக்கைச் சேர்ந்தவர் என்றும், பெற்றோர்கள் நீர் கொழும்பில் வசித்துவருவதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவர் தமது மைத்துனர் நாகமணி வடிவேஸ்வரனுடன் தங்கியிருந்துவட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் க. பொ. த. (உயர்தரம்) வரை படித்துவந்தவர் என்றும் கடந்த ஜனவரி மாதம் 14ம் திகதியுடன் வீட்டுக்குச்செல்வதில்லையென்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இரு இளைஞர்களின் சடலங்களையும் அவர்களின் குடும்பத்தினர் பார்க்க அனுமதிக்கப்பட்டனர்.

இரு சடலங்களும் பொலிசாராலும் இராணுவத்தினாலும் எடுத்துச்செல்லப்பட்டபோது பார்வையிடஅவர்களின்உறவினர்களோ பார்வையாளர்களோ அனுமதிக்கப்படவில்லை.

சடலங்கள் எந்த இடத்தில் எரிக்கப்பட்டதென்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்க மறுத்துவிட்டன. ஒதுக்குப்புறமான ஒரு இடத்தில் எரிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. (மா)

## வேங்கை ஆனந்தனை தேடி இராணுவம் சோதனை

[யாழ்ப்பாணம்]

தமிழ் மாணவர் பேரவைத் தலைவர் திரு. வேங்கை ஆனந்தனைத்தேடி இராணுவத்தினர் நேற்று அராலியிலுள்ள அவரின் வீட்டைச் சோதனையிட்டனர்.

அராலி, வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளிலும் இராணுவத்தினர் நேற்று வீதிகளால் வருவோரை மறித்துச் சோதனையிட்டனர்.

## மாநாடு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

10-15 மணி: விடய ஆலோசனைக்கூட்டம் (நகரமண்டபம் அமரர் திருநாவுக்கரசு அரங்கு).

24-ம் திகதி

காலை 10-00 மணி: அரசியல் மகாநாடு (நகரமண்டபம், அமரர் கதிரவேற்பிள்ளை அரங்கு).

தமிழ் தேசியகீதம், வரவேற்புரை வரவேற்பு (குழுத் தலைவர்), தலைமைப்பேருரை (தலைவர்), செயலாளர்நாயகம் அறிக்கை சமர்ப்பிப்பார்.

அரசியல் தீர்மானம், ஏனைய தீர்மானங்கள்,

நன்றியுரை: மாநாட்டு செயலாளர் தமிழ்த் தாய் வாழ்த்து.

மாலை 5 மணி: பகிரங்க பொதுக்கூட்டம்: [நகரசபை முன்றல், அமரர் அழகக்கோன் அரங்கு].

## 2 மணியுடன் பஸ்சேவைகள் ரத்து

[யாழ்ப்பாணப்]

யாழ். மாவட்டத்தில் நேற்றுப்பிற்பகல் 2 மணியுடன் பஸ் சேவைகள் திடீரென ரத்துச் செய்யப்பட்டதால் பிரயாணிகள் பெரும் அவலநிலைக்குள்ளாகினர்.

யாழ். ஆஸ்பத்திரியில் பி. ப. 5 மணியளவில் நோயாளர்களைப் பார்வையிட வந்த பார்வையாளர்கள் மினிபஸ்களையே தஞ்சம் அடைந்தனர்.

பிற்பகல் இரண்டுமணிக்குப் பின்னர் பஸ் சேவை இல்லாததால் வீதிகளில் ஜன நடமாட்டம் குறைந்து காணப்பட்டது.

## இன்று ஹர்த்தால்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தால் அனுஷ்டிக்குமாறு துண்டுப்பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பாடசாலைகளையும் தனியார் கல்வி நிறுவனங்களையும் மாணவர்கள் பகிஷ்கரிக்குமாறும், வர்த்தகர்கள் கடைகளைப்பூட்டுமாறும் நடமாட்டங்களை குறைத்துக் கொள்ளுமாறும் அத்துண்டுப்பிரசுரங்களில் கோரப்பட்டுள்ளது.

'ஈழத்தமிழ் இளைஞர் ஒன்றியத்தின்' வேண்டுகோளாக இப்பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. (அ)

## 'பழனிவேல்' மரணம் கொலைஎனத் தீர்ப்பு

(புலோலி)

வல்வெட்டித்துறை இராணுவமுகாமுக்கு அருகில் நடந்த சபாரத்தினம் பழனிவேலின் மரணம் கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நீதவான் கே. கணபதிப்பிள்ளை மரண விசாரணை நடத்தியபின் நேற்றுக் கொலையெனத் தீர்ப்பளித்து, வல்வெட்டித்துறை பொலிசாரை தொடர்ந்து விசாரணை செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு ஜூலை மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81. Eelanadu-P. O. Box: 49, Telegram: Eelanadu, Telephone: 22389—24126.